# தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம்

நிர்வாகக் கிளை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

**கடித எண். த.பொ/பணி/து.த.பொ/உ.மி.பொ/ ERP.2/2026–2, நாள் : 17. 06.2026.**

அனுப்புநர்

பொறி.மு.அம்பிகா, M.A.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு.

பெறுநர் :

அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும்
மேற்பார்வைப் பொறியாளர்கள்.

அய்யா,

பொருள் : நிர்வாகம் – அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் இடமாற்றம் / பதவி உயர்வு பெற்ற பணியாளர்களை பணிவிடுவிப்பு வழிகாட்டுதல் – தொடர்பாக.

பார்வை :
1. இவ்வலுவலக கடித எண்.த.பொ/பணி/ து.த.பொ/உ.மி.பொ./ERP–2/2026,நாள் 15.06.2026.
2. இவ்வலுவலக குறிப்பாணை எண் 100855/ 515/ஜி.42/ஜி.423/2002–1, (நிர்வாக பிரிவு) நாள் 30.08.2002.

*******

பார்வை (1)ல் காணும் இவ்வலுவலக கடிதத்தை தொடர்ந்து, HRMS –ERP Data updation முறையில் பணியாளர்களின் விருப்ப மாறுதல், நிர்வாக மாறுதல் மற்றும் பதவி உயர்வில் மறுநியமன உத்தரவு பெற்றவர்களுக்கு உடனடியாக பணிவிடுவிப்பு உத்தரவு வழங்காததாலும் அவர் உரிய பணி இடத்தில் பணியில் சேராததாலும் ஏற்படும் காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்கள் பராமரிப்பதில் சிரமம் ஏற்படுவதால் ஏற்கனவே பார்வை (2)ல் காணும் குறிப்பாணையில் விருப்ப மாறுதல். நிர்வாக மாறுதல் மற்றும் பதவி உயர்வு அடிப்படையில் இடமாற்றம் / மறுநியமன உத்தரவு செய்யப்படும் அதிகாரிகள் / பணியாளர்களுக்கு உடனடியாக மறுநியமன உத்தரவு வழங்கி பணிவிடுவிப்பு செய்திடும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்திட மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

2) மேற்கூறிய சிரமங்களை தவிர்க்க இடமாற்றம் / மறுநியமன உத்தரவு காலக்கெடுவை நிர்ணயிப்பது தொடர்பாக ஏற்கனவே, பார்வை (2)ல் காணும் குறிப்பாணையில் உள்ள முக்கிய கருத்துக்களை மீண்டும் கீழ்க்கண்டவாறு நினைவூட்டப்படுகிறது

..2..

அ) விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உத்தரவிடப்பட்ட அனைத்து இடமாற்ற உத்தரவுகள் கிடைத்த 7 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மறுநியமன உத்தரவு 7 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள், மறுநியமன உத்தரவுகள் வழங்கப்பட்ட 15 நாட்களுக்குள் அல்லது இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் ஒதுக்கப்பட்ட நிலையத்தில் பணியில் சேர வேண்டும்.

(ஆ) பதவி உயர்வு பெற்றவர்களைப் பொறுத்தவரை, ஒதுக்கீடு உத்தரவு கிடைத்த 7 நாட்களுக்குள் மறுநியமன உத்தரவு வழங்க வேண்டும். பதவி உயர்வு பெற்றவர்கள் மறுநியமன உத்தரவுகள் கிடைத்த 48 மணி நேரத்திற்குள் பணிவிடுவிப்பு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு பணிவிடுவிப்பு செய்யப்பட்டவர்கள் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் பணியேற்பு செய்ய வேண்டும்.

3) நீர்மின் உற்பத்தி ஆபரேட்டர்கள் / Mtce. பணியாளர்கள்/LDC மற்றும் இதே போன்ற துணை நிலையப் பணியாளர்கள் மேற்கண்ட அறிவுறுத்தல்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறார்கள். இருப்பினும், துணை நிலையங்களின் கட்டுப்பாட்டு அதிகாரிகள்தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு நிலைமையை நிர்வகிக்க முடிந்தால், தங்கள் அதிகாரிகளை பணி விடுவிப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பணியிட மாற்றம் மற்றும் பதவி உயர்வு பெற்றவர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்ய வேண்டும்.

4) மேற்கண்ட சிக்கல்களை தவிர்க்க பணியிட மாற்றம் பெற்ற பணியாளர்களுக்கு பணிவிடுவிப்பு உத்தரவு வழங்கி பணியேற்பு செய்ய அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் அனைவரும் மேற்கண்ட வழிகாட்டுதல் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும், நிர்வாகச் சிக்கல்களை ஏற்படுத்தும் தேவையற்ற கால தாமதத்தைத் தவிர்க்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

7/2/6/26

துணை தலைமைப் பொறியாளர் (பொ.)
தலைமைப் பொறியாளர்/பணியமைப்புக்காக

இயக்குநர் (பகிர்மானம்) அவர்களுக்கு நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

<u>நகல்</u>

தலைமைப் பொறியாளர்/தகவல் தொழில்நுட்பம் (IT & RAPDRP)
துணை தலைமைப் பொறியாளர்/த.நா.மி.ப.க/சென்னை.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆள்சேர்ப்பு/நிர்வாகக் கிளை.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/நிர்வாகம்/நிர்வாகக் கிளை.
அனைத்து பணித்தொகுதி அலுவலர்கள் /நிர்வாகக் கிளை.
அனைத்து உதவி பணித்தொகுதி அலுவலர்கள் /நிர்வாகக் கிளை.
கண்காணிப்பாளர் (ஜி.77), தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அலுவலகம்
இருப்பு கோப்பு